**08.05.2023**
**CC. 3/2012**
**PW – 2, Kannan**
**2ம் எதிரி தரப்பில் கு.வி**

தமிழ்நாடு சேவா சங்கம் சங்கவிதிகளின் படி தான் செயல்படும் என்றால் சரிதான். சங்கவிதிகள் என்பது அந்தந்த சங்கங்கள் உள்விதிகள் தயார் செய்து அதனை மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் தாக்கல் செய்து ஏற்புகை செய்த பிறகுதான் செயல்படும் என்றால் சரிதான். தமிழ்நாடு சமூக சேவா சங்கத்தில் தலைமை அலுவலக முகவரி கள்ளிக்குடியில் உள்ளது என்றால் சரிதான். ஒவ்வொரு உறுப்பினரும் அந்தந்த ஆண்டு உறுப்பினர் கட்டணம் செலுத்தி புதுப்பித்து கொண்டால் தான் சங்கத்தின் உறுப்பினராக தொடர முடியும் என்றால் சரிதான். ஒவ்வொரு ஆண்டும் சங்கத்தின் உறுப்பினர்கள் சேர்க்கபட்டாலும், நீக்கம் செய்தாலும் அதனை பொதுக்குழு கூடி தீர்மானம் நிறைவேற்றி மாவட்ட பதிவாளர் அலுவலகத்திற்கு படிவம் 7ன் கீழ் அனுப்பி வைப்பார்கள். 01.01.2008 முதல் 31.10.2010 வரை நிர்வாக குழு தீர்மானம் செய்து படிவம் 7 அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2011 முதல் 2013 வரை நிர்வாக குழு தீர்மானம் நிறைவேற்றி படிவம் 7 அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். 30.07.2006 அன்று புகார்தாரர் மெர்சிஅண்ணபூரணி ஒரு தீர்மானம் நிறைவேற்றி படிவம் 7 சமர்பித்துள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி நிராகரிக்கப்பட்ட உத்தரவின் மீது புகார்தாரர் மெர்சி அண்ணபூரணி என்பவர் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் மதுரை WP No.2034/2010 மேல்முறையீடு செய்துள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி மேல் முறையீடு மனு தள்ளுபடி செய்து உத்தரவு ஆகியுள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி உத்தரவிற்கு பிறகுதான் எதிரிகள் தாக்கல் செய்துள்ள மேற்படி படிவம் 7 கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2010 முதல் தற்போது வரை மெர்சி அண்ணபூரணி கள்ளிக்குடி தமிழ்நாடு சேவா சங்கத்தின் உறுப்பினர் என்றால் சரிதான். 01.01.2008 முதல் 31.12.2010 ஆம் ஆண்டிற்கான நிர்வாக குழு தீர்மானத்தின் மெர்சி அண்ணபூரணி மற்றும் சில பொறுப்பாளர்களை நீக்கம் செய்து படிவம் 7 அனுப்பியுள்ள விபரம் எனக்கு ஆவணங்களை பார்த்தால் தான் சொல்ல முடியும். சங்க உறுப்பினர்களாக இல்லாத நபர் பொதுக்குழுவிலோ செயற்குழுவிலோ கலந்து கொள்ள இயலாது என்றால் சரிதான். கிளை அலுவலகம் வைக்க எங்களிடம் அனுமதி பெற வேண்டும் என்றால் கிளை அலுவலகம் வைக்கக் கூடாது. தற்போது மேற்படி சங்கத்திற்கு மெர்சி அண்ணபூரணி செயலாளராக இல்லை என்றால் சரிதான். அவர் சுமார் 10 வருடங்களுக்கு மேலாக மேற்படி சங்கத்திற்கு செல்லவில்லை என்றும் எந்தவித நிர்வாகத்திலும் கலந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கை மெர்சி அண்ணபூரணி எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியாது. கடந்த 10 வருடங்களாக தமிழ்நாடு சேவா சங்கத்திலிருந்து மெர்சிஅண்ணபூரணி செயலாளர் என்று கையெழுத்து செய்தவேறு எந்த படிவமும் சமர்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். நான்

தாக்கல் செய்துள்ள வாதியின் தரப்பில் தாக்கல் செய்துள்ள சான்று ஆவணம் 17 ல் வரவு செலவு சம்மந்தமாக எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.